# இளைஞர்களுக்கு மத்தியில் போதைவஸ்து பாவனையின் ஊடுருவலும் அதன் தாக்கங்களும்: (அட்டாளைசேனை ஆலங்குளம் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு)

**SLM. Nafeer**

Department of Arabic Language, Faculty of Islamic Studies and Arabic Language,
South Eastern University of Sri Lanka
mohamednafeer95@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இளைஞர்களுக்கு மத்தியில் போதை வஸ்து பாவனையின் ஊடுருவலும் அதன் தாக்கங்களையும் கண்டறிதல் இதன் தலையாய நோக்கமாகும். இவ்வாய்வு பண்புரீதியாக அமைந்ததாகும், ஆய்வுப் பிரதேசத்தில் போதைப்பொருள் பிரச்சினையை கையாளுகின்ற கிராம முக்கியஸ்தர்கள் மற்றும் இளைஞர்களிடம் களஆய்வின் மூலம் பெறப்பட்ட நேர்காணலின் தரவுப்பகுப்பாய்வினையும், பெறப்பட்ட தகவல்களையும் மையப்படுத்தி செய்யப்பட்டுள்ளது. போதைப் பொருள் பாவனையானது இளைஞர்களை அடிமையாக்கியுள்ளது. ஆகவே போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் தாக்கங்களை இனம்கண்டு பாதுகாப்பதற்கான வழிமுறைகளை பரிந்துரை செய்வதாகவும் இவ்வாய்வு அமைந்துள்ளது.

**திறவுச் சொற்கள்:** இளைஞர்கள் , போதைப்பொருள், ஊடுருவல்

**ஆய்வுப்பிரச்சினை :**

இன்று நவீனத்துவமாக வாழ விரும்பும் சமூகத்தை போதைவஸ்து பாவனையின் ஊடுருவலானது உயிரோட்டமுள்ள சமூகத்தின் முதுகெலும்பாகிய இளைஞர்களையும் விட்டுவைக்கவில்லை என்றடிப்படையில் அட்டாளைசேனை ஆலக்குளம் பிரதேசத்தில் இளைஞர்களுக்கு மத்தியில் போதைவஸ்து பாவனையின் ஊடுருவலையும் அதன் தாக்கங்களையும் மதிப்பிடுவதே இவ்வாய்வுப் பிரச்சினையாக முன்னிலைப்படுத்தப்படுகின்றது.

**ஆய்வின் நோக்கங்கள் :**

போதைப்பொருள் வகைகளை அடையாளப்படுத்தி, இதனால் ஏற்படும் பாதிப்புக்களை இனம்காணல்

போதைப்பொருள் பாவனையை குறைப்பதற்கான வழிமுறைகளை அடையாளப்படுத்தல்.

மேலும் இவ்வாய்வின் மூலம் பெறப்படும் தரவுகளை ஆவணப்படுத்தலும், எதிர்கால ஆய்வாளர்களுக்கு உதவுவதலும் துணைநோக்கமாக காணப்படுகின்றது.

**அறிமுகம் :**

இன்றைய உலகம் தன்னை வளர்ந்து வரும் உலகம் , நவீனயுகம் , புதிய திருப்பம் என பல கோணங்களிலும் அழகுபடுத்தி மக்களை தன் பக்கம் ஈர்ப்பதில் முன்முரமாக ஈடுபடுகின்றது. இந்த வளர் யுகத்தில் பலரும் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கின்றனர். அந்தவகையில் இளைஞர்கள் போதைபொருளுக்கு அடிமையாகும் விடயம் ஓர் சமூகப்பிரச்சினையாக மாறிவருகின்றது.

இந்த நவீனகாலத்தில் சர்வசாதாரணமாகிவிட்ட ஒரு செயலாகவே அனைவராலும் குற்றம் சுமத்தப்படுகின்றது.

போதைப்பொருள் என்பது சருமத்திலுள்ள ஒரு இணைப்பு வழியாக உட்செலுத்தப்படும், நுகரப்படும் அல்லது நாவுக்கு கீழால் வைக்கப்பட்டு கரைப்படும் ஒரு பொருள். இது தற்காலிகமாக உடலியல், உளவியல் ரீதியாக மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியதாகும். (Stedman's Medical Dictionary, 2014) இதன் வகைகளாக மதுபானம், சிகரெட், புகையிலை, அபின், ஹெராயின், கஞ்சா, பான் மசாலா போன்றனவாகும்.

இன்றைய இளைஞர்கள்[12] நாளைய தலைவர்கள் இவர்கள் பாடசாலை சென்று பல்கலைக்கழகம் முடித்து சிறந்த பட்டதாரிகளாக வருவதற்கு பதிலாக போதைக்கு அடிமையாகி நாளைய நற்சமூகத்தை சீர்கேட்டின்பால் கொண்டுசென்றுவிடுவார்கள் போல் தங்களின் செயற்பாடுகள் மூலம் சுட்டிக்காட்டுகின்றனர். போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் தீங்குகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஜுன் 26ஆம் திகதி சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (அலியார், யூ.எல்., 2016)

எமது இலங்கைத் திருநாட்டில் இலங்கையின் அரசியல் சட்டமும் போதைப்பொருள் பாவனையை மிகவும் கண்டிக்கிறது. எமது நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன அவர்கள் இது பற்றி கருத்துத்தெரிவிக்கும் போது ''இலங்கை திரு நாட்டில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது, இதனை ஒழிப்புசெய்வது ஒரு சமூகப்பொறுப்பாகும்'' என குறிப்பிட்டுள்ளார். (http://www.president.gov.lk/through-anti-tobacco-drugs-policies-a-healthy-nation-will-be-built-president/)

அட்டாளைச்சேனைப் பிரதேசத்திற்குட்பட்ட ஆலங்குளம் கிராமத்தில் போதைப்பொருள் பாவனை பற்றிய களஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டதனைத் தொடர்ந்து அங்கு போதைப்பாவனை இருப்பதை அவதானிக்க முடிந்தது. இந்தவகையில் இளைஞர்களுக்கு மத்தியில் போதைப்பொருள் பாவனையின் ஊடுருவலையும் தாக்கங்களையும் கண்டறிந்து, அதற்கான தீர்வுகளை முன்வைத்து, அக்கிராம மக்களிடத்தில் விழிப்பூட்டலை ஏற்படுத்துவதாக இவ்வாய்வு அமைகின்றது.

94.495 சதுரக் கிலோமீட்டரை பரப்பளவாக கொண்ட அட்டாளைச்சேனைப் பிரதேசமானது 48,808 மக்கள் சனத்தொகையை கொண்டுள்ளது. அட்டாலைச்சேனைப் பிரதேசமானது 17 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு 17 பிரிவிக்கும் 17 கிராம உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டள்ளனர். இங்கு 1

அட்டாளைச்சேனை 17ல் ஆலங்குளம் உள்வாங்கப்பட்டுள்ளது. இங்கு வாழும் 488 குடும்பங்கள் 1,738 அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. இங்கு கரடிக்குளம் ரஹ்மானிய்யா பாடசாலை அமையப்பெற்றுள்ளது. (பிரதேச செயலகம், அட்டாளைச்சேனை 2018)

இப்பிரதேசம் பல வறிய குடும்பங்களை கொண்டதாகும். இங்கு வாழும் மக்கள் அத்தியாவசியப்பொருட்களை[13] பெற மிகவும் சிரமப்படுவதுடன் பொருளாதரத்தை ஈட்டுவதில் சிரமங்களை அனுபவிக்கின்றனர். மேலும் குடும்ப வாழ்வு ரீதியாக கணவனை இழந்த பெண்கள்,

[12] Youth is the time of life when one is young, and often means the time between childhood and adulthood (maturity) (Macmillan Dictionary, Macmillan Publishers Limited. Retrieved 2013-8-15)

[13] உணவு, உடை, பாதுகாப்பான உறைவிடம் போன்றன.

தந்தையை இழந்த பிள்ளைகள் அதிகமாக காணப்படுவதை களஆய்வின் போது அவதானிக்க முடியுமாக இருந்தது. இவ்வாறு இங்குள்ள மக்களின் வாழ்வியல் காணப்படும் வேளையில் இப்பிரதேச இளைஞர்கள் போதைப்பாவனைக்கு அடிமையாகி மது, பியர், சிகரட், கஞ்சா போன்ற போதைப்பொருட்களை பாவிக்கின்றனர். இவர்கள் பிரதேசத்துக்கு வெளியில் உள்ள மதுபானசாலைகளில் மாலை நேரங்களில் கொள்வனவு செய்து பார்ட்டி (party) என்ற பெயரில் மது அருந்தி விட்டு நகரத்தின் உள்ள கடை தெருவில் வீண் சர்ச்சைகள் புரிபவர்களாக உள்ளனர் என்பவற்றை அப்பிரதேச மக்களுடனான கலந்துரையாடல்கள் மூலம் அறியக்கிடைத்தன.

**ஆய்வு முறையியல் :-**

இவ்வாய்வு பண்புரீதியானது, இது முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகளை மையப்படுத்தியதாகும். இப்பிரதேசத்தில் வாழ்கின்ற கிராம முக்கியஸ்தர்கள் ,இளைஞர்கள் மற்றும் பெண்களிடத்தில் களஆய்வு மேற்கொண்டு நேர்காணல், கலந்துரையாடல் மற்றும் கண்காணிப்பு மூலம் தகவல்கள் பெறப்பட்டன.

1) முதன்நிலைத் தரவு.

நேர்காணல், கலந்துரையாடல், அவதானிப்பு

சுமார் 130 குடும்பங்களை இனங்கன்டு அதில் மாதிரியாக 50 குடும்பங்களை சேர்ந்த மொத்தம் 100 பேர் இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். 25 குடும்பங்களில் இருந்து எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட 10 குடும்ப பெண்களிடம் ஆழ்ந்த நேர்காணல் மேற்கொள்ளப்பட்டது. மேலும் மேலதிக தகவலைப் பெற்றுக்கொள்வதற்காக பிரதேசத்தின் கல்விமான்கள், பள்ளிவாசல் நிர்வாகம், கிராம உத்தியோகத்தர் , கிராம மற்றும் மாதர் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் , சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் பாடசாலை அதிபர்கள் போன்றோருடன் குழு கலந்துறையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு தகவல்கள் திரட்டப்பட்டன.

2) இரண்டாம் நிலைத்தரவு.


ஆய்வுக்கட்டுரைகள், நூற்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள்

அதிகமான ஆய்வுக்கட்டுரைகள், நூற்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்ற வற்றில் பிரசுரிக்கப்பட்ட இதுதொடர்பான கட்டுரைகள் வாசிக்கப்பட்டு எழுதப்பட்டுள்ளது.

**ஆய்வு பகுப்பாய்வு :-**


அட்டாளைசேனை ஆலங்குளம் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வானது இளைஞர்களுக்கு மத்தியில் போதை வஸ்து பாவனையின் ஊடுருவலையும் அதன் தாக்கங்களையும் கண்டறிதலாகும். இதன்படி இப்பிரதேசத்தில் வாழ்கின்ற கிராம முக்கியஸ்தர்கள், இளைஞர்கள் மற்றும் பெண்களிடத்தில் களஆய்வு மேற்கொண்டு நேர்காணல், கலந்துரையாடல் மற்றும் கண்காணிப்பு மூலம் பின்வரும் தகவல்கள் பெறப்பட்டன.


அங்குள்ள மக்களிடம் போதைவஸ்து பாவனை பற்றி வினவிய போது பின்வரும் வரைபு (1) பெறுபேறாக கிடைக்கப்பெற்றது.




வரைபு (1)

குறித்த பிரதேசத்தில் போதைவஸ்து பாவனை இடம்பெறுவதை மேற்படி வரைபானது விபரிக்கின்றது. குறிப்பாக நேர்காணல் செய்யப்பட்டவர்களில் அதிகமானோர் (87%) தாங்கள் போதைப்பொருள் பாவிப்பதை ஏற்றுக்கொள்வதுடன் தங்களின் வேலைக்களைப்பை போக்கிக்கொள்ள இவ்வாறு செய்வதாகவும் கூறினர். இவர்களுடன் மேலும் கலந்துரையாடல் செய்த போது அங்கு அதிகம் பாவிக்கப்படும் போதைப்பொருட்களையும், பாவிக்கும் இடங்களையும் பின்வருமாறு அடையாளப்படுத்தினர்




வரைபு (2) வரைபு (3)

அங்குள்ள மக்களிடம் அதிகளவு பாவிக்கப்படும் போதைப்பொருள் பற்றி வினவிய போது பின்வரும் வரைபு (2) பெறுபேறாக கிடைக்கப்பெற்றது. 90% மக்கள் மது பாவிப்பதாகவும் 85% பியர் பாவிப்பதாகவும் 92% சிகரட் பாவிப்பதாகவும் 45% கஞ்சா பாவிப்பதாகவும் அறியமுடிந்தது. அங்குள்ள மக்களிடம் அதிகளவு பாவிக்கப்படும் போதைப்பொருள் பாவிக்கப்படும் இடம் பற்றி வினவிய போது பின்வரும் வரைபு (3) பெறுபேறாக கிடைக்கப்பெற்றது.

போதைப்பொருள் பாவனையின் செயற்பாட்டில் இடம் செல்வாக்குச் செலுத்துகின்றது. இந்த வரைவு இரண்டையும் ஒப்பிட்டு பார்க்கும் போது மது, சிகரட் மற்றும் கஞ்சா போன்றவைகள் தூர இடங்களில் பாவிக்கப்படுகின்றது. சிகரட் பாவனை வீடு, பாடசாலை மற்றும் கடைத்தொரு இடங்களில் அதிகமாக பாவிக்கப்படுகின்றது. இங்கு போதைப்பொருள் பாவனை அதிகரித்திருப்பதற்கு அந்த ஊரின் அமைவிடமும் ஓர் காரணம் என்று கூற முடியும்

இப்பிரதேசத்தில் வாழ்கின்ற கிராம முக்கியஸ்தர்கள் மற்றும் பெண்களிடத்தில் போதைப்பொருள் பாவனை சம்பந்தமாக வினவிய போது:

- போதைப்பொருள் பாவனை தீயபழக்கம் இதனால் பல பாதிப்புக்கள் உண்டு. அனைத்து கிராமங்களையும் போன்றுதான் எங்களுடைய கிராமத்திலும் இளைஞர்கள் அதிகமாக மது, பியர், சிகரட், கஞ்சா போன்றன பாவிக்கின்றனர்.

- போதைப்பாவனையால் குடும்பப்பிரச்சினைகள் அதிகம் இடம்பெறுகின்றன. இளைஞர்கள் அதிகமாக மது, பியர், சிகரட், கஞ்சா போன்றவற்றை பாவித்து தங்களுடைய மனைவி, பிள்ளைகள் மற்றும் தன் பெற்றோர்களை துன்புறுத்துகின்றனர். குறிப்பாக பல தம்பதிகள் பிரிந்து வாழ்கின்ற நிலை அதிகரித்து வருகின்றது.
- சிலர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி நோய்களை விலைகொடுத்து வாங்கி தங்களுடைய குடும்பத்திற்கு உழைத்து செலவுக்கு கொடுக்க முடியாமல் உள்ளனர். இதனால் குடும்ப உறவுகள் சீரழிகின்றன.
- போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகிய பல இளைஞர்கள் தங்களின் படிப்பை இடைநடுவில் நிறுத்திவிட்டு கூலிவேலை செய்து அதன் வருமானத்தை மது, பியர், சிகரட், கஞ்சா போன்ற பொருட்களை வாங்க பயன்படுத்துகின்றனர்.

இங்குள்ள இளைஞர்கள் இவற்றை பாவிப்பதற்கான காரணங்களை அவர்களுடனான கலந்துரையாடல் மற்றும் நேர்காணல் மூலம் பின்வருமாறு வரையறுக்க முடிந்தது.

1-வீட்டுச்சூழல்.

வீட்டுச் சூழலிலிருந்து பல இளைஞர்கள் போதை பாவனைக்கு ஆளாகின்றனர். தந்தை பாவனையாளராக இருந்தால் அதனை பார்த்து மகன் பயன்படுத்த ஆரம்பிக்கின்றான். நாளடைவில் இதற்கு அடிமையாகின்றார்கள்.

2-சமூகச்சூழல்.

வீட்டுச் சுழலிலிருந்து சமூகச்சூழலுக்கு வருகின்ற இளைஞர்கள் சகநண்பர்களுடன் பழகும் போது இவர்களும் ஆசையூட்டப்பட்டு அடிமையாகின்றார்கள்.

3-குடும்பப்பிரச்சினை.

குடும்பத்தின் ஏற்படும் பிரச்சினை மற்றும் கவலைகளின் போது அதற்காக தீர்வுகாணும் ஓர் அருமருந்தாகவே பயன்படுத்துகின்றனர்.

4-சமூக ஊடகங்களின் தாக்கம்.

மனித வாழ்கையின் ஏற்படும் காதல் தோல்வி, குடும்பப்பிரச்சினை, வேலையின்மை, விரக்தி, நண்பர்களுடனான மோதல்கள் போன்ற சந்தர்ப்பங்களில் மது,சிகரெட் பாவிக்கும்படி சமூக ஊடகங்கள் ஆசையூட்டுகின்றன. மேலும் இதனை திரைப்படங்கள், நாடகங்கள் மூலம் காட்சிப்படுத்துகின்றன. இந்தவகையில் பார்க்கும் போது இளைஞர்கள் போதைக்கு அடிமையாவதற்கு பல வழிகள் உண்டு என்பதை அறியமுடிகின்றது.

ஆகவே இவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட தரவுகளின் படி போதைப்பொருள் பாவனையானது இளைஞர்களை சுய நிலையை சீர் குலைத்து, புத்தியை மயங்க வைத்து, நல்வாழ்வுக்கு பங்கம் விளைவித்து நல்ல பண்புகளை அழித்தொழிப்பதில் முதன்மையானதாகவுள்ளது என்பதை அடையாளப்படுத்த முடிகின்றது.

**ஆய்வின் முடிவுரை :**

ஆலங்குழ பிரதேச மக்கள் மத்தியில் போதைவஸ்து பாவனையின் ஊடுருவல் அதிகமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக இங்குள்ள இளைஞர்கள் அதிகமாக போதைப்பொருட்களை பாவிப்பதை களஆய்வின் மூலமாக அறியமுடிகின்றது. மேலும் போதைப் பொருள் பாவனையின் காரணமாக உடலியல், உளவியல், சமூகவியல் சார்ந்த பிரச்சினைகள் ஏற்படுவதையும் அப்பிரதேச மக்கள் கலந்துரையாடல்களின் போது வெளிப்படுத்தியிருந்தனர். இந்தவகையில் ஆய்வுப் பிரதேசமான ஆலங்குழத்தில் போதைவஸ்து பாவனையின் ஊடுருவல் அதிகமான தாக்கங்களையும், எதிர்மறை விளைவுகளையும் ஏற்படுத்தியுள்ளதை ஆய்வின் முடிவாக முன்வைக்கப்படுகின்றது.

**பரிந்துரைகள் :**

ஆலங்குள பிரதேசத்தில் களஆய்வின் மூலம் போதைபொருளின் ஊடுருவலும், தாக்கமும் இருப்பதை அறியமுடிந்தது. இந்தவகையில் போதைப்பொருள் பாவனையை குறைப்பதற்கு பின்வரும் பரிந்துரைகள் முன்வைக்கப்படுகின்றன.

- ஆலங்குளம் பிரதேசத்தில் அதிகமான கல்விமான்களை உருவாக்குதல்.
- புத்திஜீவிகள் மூலம் போதை பாவிப்பவர்களுக்கான பயிற்சிப்பட்டறைகள், கருத்தரங்குகள், மாநாடுகள் போன்றவற்றை நடாத்தல்
- வீட்டுச்சூழலை ஆன்மீகச் சூழலாக மாற்றுதல்.
- மதஸ்தலங்கள் மூலம் சரியான முறையில் கண்டிப்புக்களும், தண்டனைகளும் வழங்கல்.
- போதைபொருள் விற்பனையாளரை இனங்கண்டு தக்க நடவடிக்கை எடுத்தல்.

**உசாத்துணைகள்:**


- ✓ ஆய்வுக்கட்டுரை: MLM. Helfan, MSM. Mazahir, MHM. Nairoos (2017), ‘‘போதைப்பொருள் பாவனையும், மகளிர் மற்றும் சிறுவர்கள் மீதான அதன் தாக்கங்களும் (ஏறாவூர் பொலிஸ் பிரிவை மையப்படுத்திய களஆய்வு’’, 4th International Symposium, Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka.
- ✓ சிவதாஸ், எஸ். (2006), ‘‘நலமுடன்’’, ஈகுவாலிற்றி கிராபிக்ஸ், கொழும்பு
- ✓ புலியுர்க் கேசிகன் (1993), ‘‘மது அருந்தக்கூடாது ஏன்?’’, பாலாஜி பப்ளிகேஷன்ஸ், சென்னை
- ✓ Nemisharan Mital (1991), “Drug Mafias”, Family Books Pvt. Ltd, Delhi
- ✓ அலியார், யூ.எல். (2016), போதைப்பொருள் பாவனையிலிருந்து மக்களை பாதுகாத்தல் http://www.samaveli.com/2016/06/pothai.html
- ✓ http://www.president.gov.lk/through-anti-tobacco-drugs-policies-a-healthy-nation-will-be-built-president/
- ✓ குடிசன வீட்டுவசதி தொகைமதிப்பு (2018), அட்டாளைச்சேனை பிரதேச செயலகம்

நேர்காணப்பட்டவர்கள்:

- ஆதம்லெப்பை, எம்.ஐ., ஊர்த்தலைவர், ஆலங்குழம் (17.06.2018)
- றிப்னாஸ், ஜே. , செயலாளர், வீதி அபிவிருத்திச்சபை, ஆலங்குழம் (17.06.2018)
- சம்சுதீன் அமான், ஊர்வாசி, ஆலங்குழம் (17.06.2018)
- ராவியா உம்மா, ஊர்வாசி, ஆலங்குழம் (17.06.2018)
- ஜமால் ஹாஜியார், பள்ளித்தலைவர், ஆலங்குழம் (17.06.2018)

- சுக்ரி, எம். , சாரதி, ஆலங்குழம் (17.06.2018)
- ஆதம்லெப்பை, விவசாயி, ஆலங்குழம் (17.06.2018)
- ரிஸ்வான், பீ., கூலித்தொழிலாளி, ஆலங்குழம் (17.06.2018)